NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 22 June 2016

# மருத்துவப் படிப்பு மாணவர்கள் உரை; பரஸ்பர பலன் தருகிறது

மருத்துவப் படிப்பு மாணவர்கள், தங்களுடைய பயிற்சியின் ஓர் அங்கமாக பொதுச் சுகாதார உரை நிகழ்த்துகிறார்கள்.

உயர் ரத்த அழுத்தம், நினைவாற்றல் இழப்பு நோய், கீல்வாதம் ஆகிய தலைப்புகளில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இளநிலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர்கள் உரையாற்றினார்கள்.

அந்த உரை நிகழ்ச்சிகள் சிங்ஹெல்த் பலதுறை மருந்தகங்களில் நடந்தன. இந்த மருந்தகங்கள் ஏற்பாடு செய்த அந்த உரை நிகழ்ச்சிகள் மூலம் தேசிய பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்குப் பொது உரை நிகழ்த்த பயிற்சி அளிக்கப்பட்டது. அந்த மாணவர்கள் பெறும் பயிற்சியின் ஓர் அங்கமாக இது இடம் பெறுகிறது.

கடந்த 2012 முதல் ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் சிங்ஹெல்த் பலதுறை மருந்தகங்களைச் சேர்ந்த குடும்ப மருத்துவர்கள் தலா 30 மாணவர்கள் அடங்கிய ஐந்து அணியினருக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பொது உரை நிகழ்த்த பயிற்சி அளிக்கிறார்கள்.

இந்த பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு மாணவியான குமாரி கோ யூ ஷான், செவ்வாய்க்கிழமை கேலாங் பலதுறை மருந்தகத்தில் பொது உரை நிகழ்த்திய ஒரு குழுவின் உறுப்பினராக இருந்தார்.

"நோயாளிகளுடன் கலந்துறவாடி அவர்களின் கவலைகளைப் புரிந்துகொள்ள இந்தப் பயிற்சி அனுமதிக்கிறது.

"இதன் காரணமாக நோய்களைத் தடுக்கும் முறைகள் பற்றி பொதுமக்களுக்குப் போதிப்பதற்கு அதிக நேரத்தை நாங்கள் செலவிட முடியும்," என்று அந்த மாணவி கூறினார்.

இந்தப் பயிற்சி செயல்திட்டத்தின் ஆற்றல் எப்படி என்பது கடந்த 2012க்கும் 2013க்கும் இடையில் அளவிடப்பட்டு, அந்த விவரங்களை ஆய்வு அறிக்கையாக சிங்ஹெல்த் பலதுறை மருந்தகம் தொகுத்தது.

கருத்து தெரிவித்த 120 மருத்துவப் படிப்பு மாணவர்களில் 92 விழுக்காட்டினர், தங்கள் மருத்துவப் படிப்பில் இந்தப் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள்.

அவர்களது உரைகளைச் செவிமடுத்த நோயாளிகளில் 52 விழுக்காட்டினர், உரை நிகழ்த்திய மாணவர்கள் பலவற்றையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டனர்.

"எலும்புகளில் காயம் ஏற்படாமல் எப்படி தவிர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றி நான் தெரிந்துகொண்டேன். எதிர்காலத்தில் அது மிகவும் உதவும்," என்று கேலாங் பலதுறை மருந்தகத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த உரையைச் செவிமடுத்த போய் ஜியோக் லோ, 59, என்ற எழுத்தர் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.